யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

Field Work Centre

தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

Term Examination, March - 2016

FWC

தரம் :- 12 (2017)

கணக்கீடு

மூன்று மணித்தியாலங்கள்

அறிவுறுத்தல்கள்:-

- 01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவும் நான்கு புள்ளிகளைக் கொண்டதாகும்.
- உங்கள் சுட்டெண்ணை மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் எழுதுக.

சுட்டெண் :.............................

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்	
பகுதி - I இற்காக	
வினா இல	புள்ளிகள்
01 - 15	
16 - 25	
மொத்தம்	

பகுதி - I

01) பின்வருவனவற்றுள் எது ஒரு நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களின் நோக்கமாகக் கருத முடியாது.
(1) நிறுவனத்தின் நிதிநிலை பற்றிய தகவலை வழங்குதல்
(2) நிறுவனத்தின் பெறுபேறு பற்றிய தகவலை வழங்குதல்
(3) பயன்படுத்துபவர்களுக்கு முகாமையின் திறன் பற்றி மதிப்பிட உதவ முடிதல்
(4) வணிக நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலை பற்றி மதிப்பிட உதவுதல்
(5) சட்டத்தின் தேவைகளை பூர்த்தி செய்தல்
(.......)

agaram.lk

02) உரிமையாண்மையில் பங்கேற்பவர்களின் பங்களிப்பின்றி உரிமையை அதிகரிக்கின்றதும், நிறுவனத்தின் சாதாரண செயற்பாடுகளின் விளைவாக காலப் பகுதியினுள் எழுந்த மொத்த பொருளாதார நலனின் உட்பாய்ச்சல் அழைக்கப்படுவது
(1) மேலதிக மூலதன அறிமுகம்
(2) நடைமுறை அல்லா சொத்து விற்பனை இலாபம்
(3) வருமானம்
(4) கிடைக்கப் பெற்ற மானியம்
(5) சொத்து மறுமதிப்பீட்டு லாபம்
(.......)

03) ஜெயா நிறுவனத்தின் முதலாம், மற்றும் இறுதிக் காலாண்டு விற்பனைகள் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டு விற்பனைகளின் இருமடங்காகும். முதலாம் மற்றும் இறுதிக் காலாண்டு மொத்த லாப வீதம் 20% இரண்டாம் மூன்றாம் காலாண்டுகளின் மொத்த லாப வீதம் 25% வருட மொத்த விற்பனை ரூபா 540,000/= வருடத்திற்கான விற்பனைக் கிரயம்
(1) ரூபா 432,000
(2) ரூபா 450,000
(3) ரூபா 117,000
(4) ரூபா 423,000
(5) ரூபா 417,000
(.......)

04) சானுகா நிறுவனத்தின் அறவிட முடியாக் கடன், ஐயக் கடன் ஏற்பாடு மீளப்பெற்ற அறவிட முடியாக் கடன் ஆகியவற்றின் மீதிகள் வருமாறு

	31.03.2015(*Rs*)	31.03.2016 (*Rs*)
ஐயக்கடன் ஏற்பாடு	10000	8000
மீளப்பெற்ற அறவிட முடியாக் கடன்	6000	7000
அறவிட முடியாக் கடன்	11000	14000

31.03.2016 ல் வருமானக்கூற்றில் அறவிட முடியாக் கடன், ஐயக்கடன் தொடர்பாக பதியப்படும் தொகை

(1) ரூபா 5000

(2) ரூபா 19000

(3) ரூபா 12000

(4) ரூபா 14000

(5) ரூபா 9000 (......)

05) மோட்டார் வாகனத்தின் ஆண்டுக்குரிய பெறுமானத் தேய்வுக் கணக்குக்கான முடும் பதிவு

(1) இலாப நட்டக்கணக்கு வரவு, பெறுமானத் தேய்வு கணக்கு செலவு

(2) பரீட்சை மீதி வரவு, பெறுமானத்தேய்வு கணக்கு செலவு

(3) பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு வரவு, பெறுமானத் தேய்வு கணக்கு செலவு

(4) மோட்டார் வாகனக் கணக்கு வரவு, பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு செலவு

(5) இலாபநட்டக் கணக்கு வரவு, ஐந்தொகையில் சொத்தில் கழித்து காட்டுதல் (......)

06) *KFC* நிறுவனம் விமான பயணிகளுக்கான மதிய உணவை உற்பத்தி செய்து விநியோகித்து வருகின்றது. 31.12.2014 ல் இதன் கணக்காளர் இருப்புக்களை கணக்கெடுக்கும் போது கீழ்வரும் விடயங்களை அவதானிக்கின்றார்.

* ✱ மூலப்பொருட்களின் கிரயம் ரூபா 350,000 (தேறிய நிகர பெறுமதி ரூபா 450,000)
* ✱ நடைபெறும் வேலை கிரயம் ரூபா 250,000 (தேறிய நிகர பெறுமதி ரூபா 200,000)
* ✱ முடிவுப் பொருட்களின் கிரயம் ரூபா 450,000 (தேறிய நிகர பெறுமதி ரூபா 400,000)
* ✱ பொதி செய்யும் விசேட அட்டைப் பெட்டிகள் கிரயம் ரூபா 100,000/=
* ✱ விநியோக வாகனத்திற்கான எரிபொருள் இருப்புக் கிரயம் ரூபா 20,000/=

31.12.2014 ல் ஐந்தொகையில் இருப்புக்களின் மொத்த முன்கொண்டு செல்லும் தொகை

(1) ரூபா 1070,000

(2) ரூபா 1050,000

(3) ரூபா 950,000

(4) ரூபா 970,000

(5) ரூபா 1170,000 (......)

07) பின்வருவனவற்றில் நிகழ்த்தக்க பொறுப்பொன்றுக்கு இருக்கக்கூடிய பண்பு

(1) காலமும் தொகையும் நிச்சயமற்றது

(2) தற்போதைய கடப்பாடு

(3) வளங்களின் வெளிப்பாய்ச்சல் சாத்தியம்

(4) சாத்தியமான கடப்பாடு

(5) நம்பகரமான மதிப்பீடு (......)

08) கணக்கீட்டு அடிப்படை என்பது (*Accounting Basic*)

(1) காசு அடிப்படை மற்றும் அட்டுறு அடிப்படை

(2) வரலாற்றுக்கிரய அடிப்படை மற்றும் நடைமுறைக் கிரய அடிப்படை

(3) நிதிக்கணக்கீட்டு அடிப்படை மற்றும் முகாமைக் கணக்கீட்டு அடிப்படை

(4) வணிகக் கணக்கீடு மற்றும் பொதுக் கணக்கீடு

(5) கணக்கீட்டுக் கோட்பாடு மற்றும் கணக்கீட்டு நடைமுறை (......)

agaram.lk

Scanned with CamScanner

பின்வரும் தகவல்கள் சங்கவி நிறுவனத்தின் 01.03.2016 ல் வழமையான விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுடன் தொடர்பானவையாகும். இந்நிறுவனம் பெறுமதி சேர் வரிக்காகப் பதிவு செய்யப்படவில்லை.

	ரூபா
பொருட்களின் பட்டியல் விலை	700,000
பெறுமதி சேர் வரி செலுத்தியது	70,000
உள்வந்த வண்டிக்கூலி	30,000
பொருட்களை விற்பனைக்குத் தயாராக பொதி செய்தல்	20,000

கொள்வனவின் போது 10% வியாபாரக் கழிவு பெறப்பட்டது. *LKAS* 02ன் படி தொக்குகளின் கொள்வனவுக் கிரயம்

(1) ரூபா 800,000
(2) ரூபா 730,000
(3) ரூபா 660,000
(4) ரூபா 680,000
(5) ரூபா 750,000

(.......)

10) துஷா நிறுவனம் இயந்திரம் ஒன்றினை 01.03.2016 ல் கொள்வனவு செய்தது. இதனுடன் தொடர்புபட்ட கிரய விடயம் வருமாறு

	ரூபா "000"
கொள்வனவு பட்டியல் விலை	2,000
பட்டியல் விலையில் இருந்து கழிக்கப்பட்ட வியாபாரக் கழிவு	100
நிறுவுதற் கிரயம்	1,200
இயந்திர பாவனைக்கு முன்பான சோதனைச் செலவு	150
பாவனையின் போது உதிரிப்பாகங்களை பதிலீடு செய்தல் செலவு	250
வருடாந்த பராமரிப்பு செலவு	100

இவ்வியந்திரமானது எத்தொகையில் சொத்தொன்றாக இனங்காணப்பட வேண்டும்?

(1) ரூபா 3100,000
(2) ரூபா 3250,000
(3) ரூபா 3350,000
(4) ரூபா 3500,000
(5) ரூபா 3800,000

(.......)

11) தீபா நிறுவனத்தின் 31.03.2016 ல் முடிவடைந்த ஆண்டுக்கான தேறியலாபம் ரூபா 60,000 இக்கணக்காண்டுக்கான பற்றுக்கள், மேலதிக மூலதனம் முறையே ரூபா 15000, ரூபா 30,000 ஆகவும் இருந்தது. 31.03.2016 ல் முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு

(1) ரூபா 45,000
(2) ரூபா 30,000
(3) ரூபா 90,000
(4) ரூபா 105,000
(5) ரூபா 75,000

(.......)

agaram.lk
Scanned with CamScanner

12) நிறுவனமொன்று மேற்கொண்ட கடன் விற்பனை தொடர்பான தகவல்கள் வருமாறு மொத்தக் கடன் விற்பனை, விற்பனையின் பட்டியல் விலை ரூபா 400,000 விற்பனைகள் மீதான வியாபார கழிவு 10% விற்பனை விலையில் 20% பெறுமதி சேர் வரி சேர்க்கப்பட்டதாகும். பின்வரும் கணக்குகளில் காட்டத்தக்க சரியான தொகையைக் கொண்ட தொகுதியினைத் தெரிவு செய்க.

	விற்பனை	கடன்பட்டோர்	பெறுமதிசேர் வரி
(1)	ரூபா 400,000	ரூபா 432,000	ரூபா 32,000
(2)	ரூபா 360,000	ரூபா 360,000	ரூபா 72,000
(3)	ரூபா 360,000	ரூபா 432,000	ரூபா 72,000
(4)	ரூபா 300,000	ரூபா 360,000	ரூபா 60,000
(5)	ரூபா 352,000	ரூபா 432,000	ரூபா 80,000

(.....)

13) பரீட்சை மீதி சமப்படுத்துவதில் தாக்கம் செலுத்தாத கொடுக்கல் வாங்கல்களில் சரியானது / சரியானவை

A - வரவுத்தாள் ஒன்றின் பெறுமானம் ரூபா 6000 ஆனால் ரூபா 600/= என பதிவு செய்தல்

B - பெற்ற கழிவு கணக்கு மீதி ரூபா 1500 பரீட்சை மீதியில் வரவில் ரூபா 1000 எனவும் கொடுத்த கழிவு கணக்கு மீதி ரூபா 500 பரீட்சை மீதியில் ரூபா 1000 எனவும் செலவில் பதியப்படல்.

C - விற்பனைப் பட்டியலில் ரூபா 9000 முதன்மையேட்டில் பதியப்படாதுவிடல்

D - பெற்றதரகு ரூபா 1100 மின்சாரக் கொடுப்பனவு ரூபா 1300 ற்கான பதிவுகள் பேரேட்டில் மின்சாரக் கணக்கில் ரூபா 300 எனவும் பெற்ற தரகுக் கணக்கில் ரூபா 100 எனவும் பதியப்படல்

(1) A, B, C சரியானவை
(2) A, D சரியானவை
(3) A, C, D சரியானவை
(4) B, C, D சரியானவை
(5) A, B, C ,D எல்லாம் சரியானவை

(.....)

agaram.lk

❖ 14ம், 15ம் வினாக்களுக்கு பின்வரும் தகவலைப் பயன்படுத்தி விடையளிக்குக.

டினோ நிறுவனத்தின் 01.03.2016 ல் இருந்தபடி சொத்துக்கள் பொறுப்புக்கள் முறையே ரூபா 125,000, 50,000 ஆகவும் காணப்பட்டன. மார்ச் மாதம் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

* வங்கிக்கடன் தவணைப் பணக் கொடுப்பனவு ரூபா 11,200/= உரிமையாளர் தனது சொந்த நிதியிலிருந்து செலுத்தியிருந்தார். இக்கொடுப்பனவில் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான சம வங்கிக் கடன்வட்டி ரூபா 1200/= உள்ளடங்கும்.
* உரிமையாளர் ரூபா 5000 னை பற்றியிருந்தார்
* ரூபா 20000 கிரயமான இருப்புக்கள் ரூபா 35000 இற்கு கடனுக்கு விற்பனை

14) 31.03.2016 ல் நிறுவனத்தின் தேறிய சொத்து யாது?

(1) ரூபா 101,200
(2) ரூபா 95,800
(3) ரூபா 100,800
(4) ரூபா 85,000
(5) ரூபா 96,200

(.....)

15) மேற்படி கொடுக்கல் வாங்கலின் பின்னர் தொழிற்பாடு மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றம் யாது?

(1) ரூபா 10,000 இனால் அதிகரிப்பு
(2) ரூபா 15,000 இனால் அதிகரிப்பு
(3) ரூபா 5,000 இனால் குறைவு
(4) ரூபா 10,800 இனால் அதிகரிப்பு
(5) ரூபா 20,800 இனால் அதிகரிப்பு

(.....)

Scanned with CamScanner

16 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

16) சகா உற்பத்தி நிறுவனத்தில் இருந்து 31.03.2016 ல் முடிவடைந்த ஆண்டிற்கான தகவல்கள் வருமாறு

	ரூபா
நேரச் செலவு	15,000
குறைவேலை இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு	8,000
உற்பத்திக் கிரயம்	120,000
மொத்த மேந்தலைச் செலவு	25,000
மூலப்பொருள் இருப்பில் ஏற்பட்ட குறைவு	15,000

மேலதிக தகவல்கள்

* உற்பத்திக் கிரயத்தில் 75% மூலக்கிரயம்
* மோட்டார் வாகனத்திற்கான பெறுமானத் தேய்வு ரூபா 5000 மேந்தலைச் செலவினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகனம் விநியோகத்திற்காக பயன்படுத்தப்படுகின்றது.

31.03.2016 ல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மூலப் பொருள் கொள்வனவு?

....

....

....

17) பெறுமானத் தேய்வினை பதிவு செய்வதற்கான அடிப்படை எண்ணக்கருக்கள் 2 தருக.

1. ....

2. ....

18) கணக்கீட்டின் தர ரீதியான பண்புகளைப் பட்டியல்படுத்துக.

1. ....

....

2. ....

....

19) ஐயக்கடன் ஏற்பாட்டினை மேற்கொள்வதற்கு அடிப்படையை வழங்கும் எண்ணக்கரு யாது?

....

20) பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் உள்ள விளைவினை விபரிக்குக. தை மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை பதியப்பட்டுள்ளது.

இல	சொத்து	=	மூலதனம்	+	பொறுப்பு
1	+20,000	=	+15,000	+	5,000
2	−30,000	=	−10,000	−	10,000
	+10,000				

1. ....

2. ....

agaram.lk
Scanned with CamScanner

... கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
Term Examination, March - 2016

தரம் :- 12 (2017)

கணக்கீடு

பகுதி - II

அறிவுறுத்தல்கள்:-
- ❖ முதலாம் வினா உட்பட எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக
- ❖ விடைத்தாளை பகுதி I உடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக

01) சீதா வியாபார நிறுவனத்தின் 31/03/2016 ல் முடிவடைந்த ஆண்டிற்கான பரீட்சை மீதி வருமாறு

விபரம்	வரவு	செலவு
கொள்வனவுகள்	200,000	
விற்பனை		500,000
1/4/2015ல் இருப்பு	50,000	
திரும்பல்கள்	10,000	15,000
உட்சுமை கூலி	15,000	
இறக்குமதி வரி	10,000	
விளம்பரம்	15,000	
தொலைபேசி	12,000	
மின்சாரம்	8,000	
விற்பனைச் செலவுகள்	16,000	
10% வங்கிக் கடன்		200,000
ஆதனம் - கிரயத்தில்	300,000	
பொறி - கிரயத்தில்	400,000	
உபகரணம் - கிரயத்தில்	300,000	
திரண்ட பெறுமானத் தேய்வு 01/04/2015		
ஆதனம்		100,000
பொறி		150,000
உபகரணம்		100,000
சம்பளம் (தேறியது)	27,000	
காசும் வங்கியும்	55,000	
மூலதனம்		400,000
10% நிலையான வைப்பு 1/10/2015 ல் முதலிடப்பட்டது	100,000	
கடன்பட்டோர்	55,000	
கடன்கொடுநர்		45,000
கழிவுகள்	6,000	5,000
வாடகை	8,000	
வங்கிகடன் வட்டி	3,000	
பொறி விற்பனையால் பெற்ற காசு		75,000
	1590,000	1590,000

agaram.lk

Scanned with CamScanner

பின்வரும் தகவல்கள் கருத்திற் கொண்டு முடிவுக் கணக்கினை தயார் செய்க.

01. 31/03/2016 ல் இருப்பின் கிரயம் ரூபா 80,000 இவ்விருப்பின் தேறிய நிகரப் பெறுமதி ரூபா 75,000/=.

02. 31/03/2016 ல் பின்வரும் செலவினங்கள் அட்டுறு காணப்படுகின்றது.

வாடகை 3000/=

மின்சாரம் 2000/=

03. நிதியாண்டில் ரூபா 20,000/= கிரயமான இருப்புக்கள் முழுமையாக தீயால் அழிவடைந்துள்ளது. நிறுவனம் இருப்புக்களுக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளமையால் காப்புறுதி கம்பனி 75% இழப்பீடு தருவதாக ஒப்புக் கொண்டுள்ளது இதுவரை பெறப்படவில்லை. இது தொடர்பான பதிவுகள் எதுவும் இடம்பெறவில்லை.

04. 1/7/2013 ல் ரூபா 200,000/= இற்கு கொள்வனவு செய்யப்பட்ட பொறி ஒன்று ரூபா 75,000/= ற்கு 1/4/2015 ல் விற்பனை செய்யப்பட்டது. பெற்ற காசு மாத்திரம் பதிவு செய்யப்பட்டது. வேறு எவ்வித பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

05. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர்களாலும், நிறுவனத்தினாலும் முறையே 10%, 15% பங்களிப்பு செய்யப்படுகின்றன. ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு நிறுவனத்தினால் 3% பங்களிப்பு செய்யப்படும். இந்நிதியம் தொடர்ந்து வரும் ஆண்டில் மத்திய வங்கிக்கு அனுப்பப்படும்.

06. ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கிரயத்தில் 10% தேய்விடப்படுகின்றது.

07. கடன்பட்டோரில் ரூபா 10,000 ஐ அறவிட முடியாக் கடனாக பதிவழிப்பதுடன் மிகுதிக் கடன்பட்டோரில் 5% ஏற்பாட்டினை சீராக்கம் செய்க.

08. வங்கிக்கடன் 01/01/2016 ல் பெற்றுக் கொள்ளப்பட்டது. இது 5 வருடத்திலும் மீள செலுத்தப்பட வேண்டும்.

வேண்டப்படுவது

1) 31/03/2016 ல் முடிவடைந்த நிதியாண்டிற்கான வருமானக் கூற்று

2) 31/03/2016 ல் உள்ளவாறான நிதி நிலபரக்கூற்று (20 புள்ளிகள்)

agaram.lk

02) கனி வியாபார நிறுவனத்தின் தை, மாசி, பங்குனி மாதங்களுக்கான கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

01/01/2016 ல் மீதிகள் வருமாறு	காசும் வங்கியும்	100,000
	இருப்பு	80,000
	கடன்பட்டோர்	60,000
	கடன்கொடுத்தோர்	50,000

காலாண்டுக்கான கொடுக்கல் வாங்கள் வருமாறு

1/1/2016	ல்	தளபாடம் கொள்வனவு ரூபா 200,000 இதன் பயன்தரு ஆயுட்காலம் 10 வருடங்கள் இழிவுப் பெறுமதி ரூபா 40,000
15/1/2016	ல்	மீள் விற்பனை நோக்கம் கருதிய பொருட்கள் கொள்வனவு ரூபா 10,000
20/1/2016	ல்	பொருட்கள் காசுக்கு விற்பனை ரூபா 20,000
30/1/2016	ல்	பொருட்கள் கூறுக்கு விற்பனை ரூபா 30,000 இதன் கிரயம் ரூபா 20,000
10/2/2016	ல்	சம்பளம் செலுத்தியது ரூபா 7,000
15/2/2016	ல்	மீள் விற்பனை நோக்கம் கருதிய பொருட்கள் கடனுக்கு கொள்வனவு ரூபா 35,000
20/2/2016	ல்	உரிமையாளர் சொந்த தேவைக்காக எடுத்த காசு ரூபா 5,000
28/2/2016	ல்	சேவை வருமானம் உழைத்தது ரூபா 12,000 காலாண்டுக்குரியதில் தை மாதத்திற்கான வருமானம் மூத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

5/3/2016 ல் கடன்பட்டோரில் ரூபா 20,000 கடன் 10% காசுக் கழிவில் பெறப்பட்டது.
10/3/2016 ல் மின்சாரப் பட்டியல் ரூபா 8,000 பெற்றுக் கொள்ளப்பட்டது.
15/3/2016 ல் கடன்கொடுத்தோருக்கு கொடுத்த காசு ரூபா 27,000 பெற்ற கழிவு 10%
22/3/2016 ல் 30/1/2016 ல் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டதில் இருந்து ரூபா 6,000 பட்டியல் விலைப் பொருள் திரும்பி அனுப்பப்பட்டது.
28/3/2016 ல் கடன்பட்டோர் மீதியும் 5% ஐயக்கடன் ஏற்பாட்டினை காலாண்டுக்காக சீராக்கம் செய்க.

வேண்டப்படுவது :

1) பின்வரும் கணக்கீட்டு சமன்பாட்டில் மேல் கூறப்பட்ட காலாண்டுக்கான கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்க.

இல	காசும் வங்கியும்	இருப்பு	கடன் பட்டோர்	தளபாடம்	மூலதனம்	கடன் கொடுநர்
1						
2						

2) தேறிய லாபம் / நட்டம் யாது?

(10 புள்ளிகள்)

03) சாலினி வணிகத்தின் 1/4/2015 ல் நடைமுறை அல்லா சொத்து தொடர்பான தகவல்கள் வருமாறு:

விபரம்	கிரயம் (ரூபா '000')	1/4/2015 திரள் பெறுமானத் தேய்வு (ரூபா '000')	எஞ்சிய பெறுமதி (ரூபா '000')	ஆயுட்காலம் (வருடங்கள்)
ஆதனம்	10000	1600	2000	10
பொறி	6000	1925	1000	8
உபகரணம்	5000	1200	2000	10

நிதியாண்டில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றது.

* ஆதனம் 1/10/2015 ல் ரூபா 1000 இற்கு புதுப்பித்தல் வேலை மேற்கொள்ளப்பட்டது. இத்திகதியில் இருந்து இதன் ஆயுட்காலம் 7 வருடங்கள் எனவும் எஞ்சிய பெறுமதியில் மாற்றம் எதுவும் இல்லை என மதிப்பிடப்பட்டது.
* 1/1/2016 ல் பொறி அனைத்தும் ரூபா 5000/= இற்கு விற்பனை செய்யப்பட்டது.
* 1/7/2015 ல் 2000 பெறுமதியாள உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டது. இதன் ஆயுட் காலம் 5 வருடங்கள், எஞ்சிய பெறுமதி பூச்சியம் எனவும் கொள்ளப்பட்டது.

agaram.lk

வேண்டப்படுவது :

1) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான பேரேட்டுக் கணக்குகள்
   1. ஆதன, ஆதன பெறுமானத்தேய்வு, ஆதன பெறுமானத்தேய்வு ஏற்பாட்டு கணக்குகள்
   2. பொறி, பொறி பெறுமானத்தேய்வு, பொறி பெறுமானத்தேய்வு ஏற்பாட்டு கணக்குகள்
   3. பொறி முடிவு செய்தல் கணக்கு
   4. உபகரண, உபகரண பெறுமானத்தேய்வு, உபகரண பெறுமானத்தேய்வு ஏற்பாட்டு கணக்குகள்

(10 புள்ளிகள்)

04) அ) வரையறுத்த ஜான் நிறுவனத்தின் 31 மார்ச் 2016 இல் உள்ளவாறான பரீட்சை மீதி இணங்கவில்லை. வேறுபாடு ஒரு தொங்கல் கணக்கில் வைக்கப்பட்டு முடிவுக் கணக்குகளும் தயாரிக்கப்பட்டன. நிதிக்கூற்றுக்களின்படி நிகர இலாபம் ரூபா 25,000 ஆகும். தொடர்ந்து பின்வரும் தவறுகள் இனங்காணப்பட்டன.

1. வங்கி அறவிட்ட வட்டி 250 வங்கிக் கணக்கில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டது.
2. விற்பனைப் பட்டியல் ரூபா 5500/= ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை.
3. வங்கி மேலதிக பற்றுக்கான வட்டி ரூபா 1000/= பரீட்சை மீதியில் விடுபட்டிருந்தது.
4. ராஜாவிடம் கொள்வனவு ரூபா 6000/= கொள்வனவு நாளேட்டில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டது.
5. மின்சாரக் கணக்கு ரூபா 900 ஆல் கூடுதலாக கூட்டப்பட்டது.

வேண்டப்படுவது :

(5 புள்ளிகள்)

1) தொங்கல் கணக்கு
2) இலாப சீராக்க கூற்று

Scanned with CamScanner

ஆ) 31.03.2016 இல் அருண் நிறுவனத்தின் வங்கிக் கூற்றின்படி செலவு மீதி ரூபா 8000 ஆக இருந்தது. அத்திகதியில் காசேட்டின்படி வங்கி மீதி வேறொரு மீதியைக் காட்டியது. வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு.

1. மார்ச் மாதத்தில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 75,000 காசோலையில் ரூபா 53,000 மாத்திரம் வங்கிக் கூற்றில் இடம்பெற்றிருந்தது.
2. மார்ச் மாதத்தில் எழுதிக் கொடுக்கப்பட்ட காசோலை ரூபா 60,000 த்தில் ரூபா 48,000 மாத்திரம் வங்கிக் கூற்றில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
3. வங்கியினால் நிலையான கட்டளை அடிப்படையில் செலுத்திய காப்புறுதி ரூபா 6000, பெற்ற பங்குலாபம் ரூபா 5000 காசேட்டில் இடம்பெறவில்லை.
4. வங்கியினால் அறவிட்ட வங்கிக் கட்டணம் 500, காசோலைப் புத்தகக் கட்டணம் 200 காசேட்டில் இடம்பெறவில்லை.
5. தருண் நிறுவனத்தினால் வைப்புச் செய்யப்பட்ட காசோலை ரூபா 7000 தவறுதலாக அருண் கணக்கில் வங்கியினால் செலவு வைக்கப்பட்டது.

வேண்டப்படுவது

1) திருத்திய காசேடு
2) காசேட்டு மீதிக்கும் வங்கிக் கூற்று மீதிக்கும் இடையிலான வேறுபாடு (5 புள்ளிகள்)

05) அபி நிறுவனத்தின் 31.03.2016 ல் ஏடுகளில் காணப்பட்ட மீதிகள் வருமாறு:

விற்பனைப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கு நிலுவை	65000
விற்பனைப் பேரேட்டுப் பட்டியல் மொத்தம்	?
கொள்வனவு பேரேட்டுக் கட்டுப்பாட்டு நிலுவை	75000
கொள்வனவு பேரேட்டுப் பட்டியல் மொத்தம்	?

31.03.2016 இல் கட்டுப்பாட்டு மீதிகளுடன் பட்டியல் மீதிகள் இணங்கவில்லை. பரிசீலனையின் மூலம் தவறுகள் இனங்காணப்பட்டன.

1. கடன் கொடுநர் நிலுவை கொள்வனவுப் பேரேட்டுப் பட்டியலில் ரூபா 150,000 விற்பனைப் பேரேட்டுப் பட்டியலில் கடன்படுநர் நிலுவை ரூபா 225000 தவறவிடப்பட்டிருந்தது.
2. உட்திரும்பல் நாளேட்டின் கூட்டுத்தொகை ரூபா 40,000 இனைால் கூடுதலாக கூட்டப்பட்டிருந்தது.
3. கொள்வனவு நாளேட்டில் கொள்வனவுப் பட்டியல் ரூபா 10,000 இனை பதிவு செய்யவில்லை.
4. காசேட்டின் பெறுவனவுப் பக்க கழிவு நிரலின் மொத்தம் ரூபா 5000 கட்டுப்பாட்டு கணக்கில் ரூபா 500/= என பதிவு செய்யப்பட்டது.
5. கடன்பட்டோரிடம் பெறவேண்டிய தொகை ரூபா 6000 அறவிட முடியாக்கடனாக பொது நாட்குறிப்பேட்டில் பதியப்பட்ட போதிலும், வேறு எப்பதிவும் செய்யப்படவில்லை.
6. கடன்பட்டோரிடம் பெற்று வைப்புச் செய்யப்பட்ட காசோலை ரூபா 4000 வங்கியால் மறுக்கப்பட்டது. தனிநபர் கணக்கில் பதியப்பட்டது. ஆனால் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.
7. கடன்கொடுநருக்கு செலுத்திய காசு 20,000/= தவறுதலாக கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கில் பதிவு செய்யப்பட்டது.
8. கொள்வனவுத் திரும்பல் ரூபா 7500/= நாளேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

வேண்டப்படுவது :

1) செம்மையாக்கிய கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு
2) செம்மையாக்கிய கடன் கொடுநர் கட்டுப்பாட்டு கணக்கு
3) கட்டுப்பாட்டு கணக்கு மீதிகளை பேரேட்டு மீதிகளுடன் இணங்க வைக்கும் கூற்று (10 புள்ளிகள்)

agaram.lk
Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

Field Work Centre

தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

Term Examination, March - 2016

புள்ளித்திட்டம்

கணக்கீடு

தரம் :- 12(2017)

பகுதி - I

01) 4
02) 3
03) 4
04) 1
05) 1
06) 2
07) 4
08) 1
09) 2
10) 2
11) 5
12) 3
13) 3
14) 2
15) 5

(15 × 2 = 30 புள்ளிகள்)

16)

மூலப்பொருள் கொள்வனவு	73000
மூலப்பொருள் குறைவு	15000
பயன்படுத்தியது	88000
நேர்ச் செலவு	15000
மூலக்கிரயம்	103000
மேந்தலை	25000
	128000
இறுதிக் குறைவேலை	(8000)
	120000

(2 புள்ளி)

17) இணைத்தல் எண்ணக்கரு (1 புள்ளி)
தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு (1 புள்ளி)

18) அடிப்படை பண்பு
I. பொருத்தப்பாடு
II. உண்மையான பிரதிநிதித்துவம்
(1 புள்ளி)

விருத்தி செய்யும் பண்பு
I. ஒப்பிடக்கூடியது
II. காலந்தவறாமை
III. அளவிடக்கூடியது
(ஏதாவது 2 க்கு 1 புள்ளி)

19) பாதுகாப்பு எண்ணக்கரு (2 புள்ளி)

20) I. 15000 வருமானத்திற்கு 20000 பெறப்பட்டிருந்தது. (1 புள்ளி)
II. மார்கழி, தை, மாசி மாதங்களுக்கான குறித்த செலவினத்திற்காக 30,000 செலுத்தப்பட்டுள்ளது. (1 புள்ளி)

21) I. செலவுக்கணக்கு
II. சொத்துக் கணக்கு
III. பொறுப்புக் கணக்கு
IV. செலவின கணக்கு
(2 புள்ளி)

agaram.lk
Scanned with CamScanner

22)

விபரம்	தொகை	தொகை
வங்கிக்கூற்று மீதி		12000
செலவு வைக்கப்பட்டது	9000	
வரவு வைக்கப்பட்டது	1000	8000
காசேட்டின் படி வங்கி மீதி		20000

(2 புள்ளி)

23) வரலாற்றுக் கிரய எண்ணக்கரு (2 புள்ளி)

24) I. 52000 (1 புள்ளி)

II. 268000 (1 புள்ளி)

25) தொங்கல் கணக்கு வ/வு 1500

வங்கி வட்டி கணக்கு 750

வங்கி கடன் கணக்கு 6000

வங்கிக் கணக்கு 8250 (2 புள்ளி)

பகுதி - II

01) சீதா வியாபார நிறுவனத்தின் 31.03.2016 முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று

விபரம்	தொகை	தொகை	தொகை	
விற்பனை			500,000	(1)
உட்திரும்பல்			(10,000)	(1)
			490,000	(1)
விற்ற சரக்கின் கொள்விலை				
(1) ஆரம்ப இருப்பு		50,000		
கொள்வனவு	200,000			
தீயழிவு நட்டம்	(20,000)			(2)
வெளித்திரும்பல்	(15,000)			
உட்சுமை கூலி	15,000			
இறக்குமதி வரி	10,000	190,000		(2)
விற்பனைக்கு தயாரான சரக்கின் பெறுமதி		240,000		
இறுதியிருப்பு		(80,000)		(2)
விற்பனைக் கிரயம்		160,000	(160,000)	
மொத்த லாபம்			330,000	(2)
ஏனைய செயற்பாட்டு வருமானம்				
நிலையான வைப்பு வட்டி வருமானம்		5,000		
பெற்ற கழிவு		5,000	10,000	
			340,000	

agaram.lk

Scanned with CamScanner

நிலைய நிர்வா/செலவு			
வடகை	11,000		
மின்சாரம்	10,000		
பொறி பெ/தேய்வு	20,000		
ஆதன பெறுமான தேய்வு	30,000		
உபகரண பெ/தேய்வு	30,000	(4)	
சம்பளம்	30,000		
ஊழியர் சேலாப நிதிய செலவு	4,000		
ஊழியர் நம்பிக்கை நிதிய செலவு	900		
தொலைபேசி	12,000	148,400	
விற்பனை விநியோகச் செலவு			
அறவிட முடியாக் கடன்	10,000		
ஐயக்கடன்	2250		
விளம்பரம்	15,000	(2)	
விற்பனைச் செலவுகள்	16,000		
கொடுத்த கழிவு	6,000	49,250	
நிதியும் ஏனைய செலவும்			
இருப்பு பெறுமதி வீழ்ச்சி	5,000		
இருப்பு தீயழிவு நட்டம்	5,000	(2)	
வங்கிக்கடன் வட்டி	5,000		
பொறி முடிவு செய்தல் நட்டம்	90,000	105,000	(302,650)
தேறிய லாபம்			37350

சீதா நிறுவனத்தின் 31.03.2016 ல் உள்ளவாறான நிதிநிலபரக்கூற்று

விபரம்		தொகை கிரயம்	தொகை தி/பெ/தே	தொகை தேறியது	
நடைமுறை அல்லாத சொத்து					
ஆதனம்	(2)	300,000	(130,000)	170,000	
பொறி	(2)	200,000	(135,000)	65,000	
உபகரணம்	(2)	300,000	(130,000)	170,000	
		800,000	(395,000)	405,000	
10% நிலையான வைப்பு				100,000	
				505,000	
நடைமுறைச் சொத்து					
இருப்பு			75,000		
கடன்பட்டோர்		45,000		(1)	
ஐயக்கடன் ஏற்பாடு		(2,250)	42,750		
காப்புறுதி கம்பனி வருமதி			15,000		
பெறவேண்டிய வைப்பு வட்டி வருமானம்			5,000	(1)	
காசு, வங்கி			55,000	192,750	
				697,750	(1)

agaram.lk

Scanned with CamScanner

உரிமையாண்மையும் பொறுப்பும்			
உரிமை	(3)	400,000	
தேறியலாபம்		37,300	437,350
நடைமுறை அல்லா பொறுப்ப			
10% வங்கிக் கடன்	(1)	200,000	200,000
நடைமுறைப் பொறுப்பு			
அட்டுறு வாடகை		3,000	(2)
அட்டுறு மின்சாரம்		2,000	
ஊழியர் சேமலாப நிதியம்		7,500	(2)
ஊழியர் நம்பிக்கை நிதியம்		900	
சென்மதி வங்கி கடன் வட்டி		2,000	60,400
கடன் கொடுநர்		45,000	(1)
			697,750

பொறி முடிவு செலவு

பொறி	200,000	காசு	75,000
		தி.தேய்வு	35,000 (2)
		நட்டம்	90,000
	200,000		200,000

agaram.lk

(மொத்தம் 40 புள்ளிகள்)

02)

இல	காசும் வங்கியும்	இருப்பு	கடன்பட்டோர் வருமதியும்	தளபாடம்	மூலதனம்	கடன் கொடுநர்
1./1	(200,000)		(1)	+200,000		
15/1	(10,000)	10,000	(1)	(4000)	(4000)	
20/1	20,000	(20,000)	(1)			
30/1		(20,000)	(1) 30,000 (2)			
10/2	(7,000)				+10,000	
15/2		35,000		(1)	(7,000)	
20/2	(5,000)			(1)		35,000
28/2	+4,000			(1)	(5,000)	
5/3	+18000		+8000	(1)	+12,000	
10/3			−20,000	(1)	−2,000	
15/3	−27000			(1)	−8,000	+8,000
22/3		4,000		(2)	+3,000	−30,000
28/3			−6000	(2)	−2,000	
			(3,200)	(1)	(3200)	

தேறிய லாபாம் = இறுதி தேறிய சொத்து−ஆரம்ப தேறிய சொத்து + பற்று − மேலதிக மூலதனம்

= 383800 − 390000 + 5000 − 0 (1)

தேறிய நட்டம் = −1200 (2)

(மொத்தம் 20 புள்ளிகள்)

Scanned with CamScanner

(03)

ஆதன கணக்கு (2)

மீதி	10000	மீ/செ	11000
காசு	1000		
	11000		11000
மீ/வ	11000		

ஆதன பெறுமானத் தேய்வு (1)

பெ/தே	750	வ/நட்	750

ஆதன பெறுமானத் தேய்வு ஏற்பாடு (2)

மீ/செ	2350	மீதி	1600
		பெ/தே	750
	2350		2350

பொறி கணக்கு

மீதி	6000	பொறி/மு/செ	6000
		(2)	

பொறி பெறுமானத் தேய்வு

பெ/தே	468.75	வ/நட்	468.75
		(2)	

பொறி பெறுமானத்தேய்வு ஏற்பாடு

மு/செய்	2393.75	மீதி	1925
		பெ/தே	468.75
	2393.75		2393.75
		(3)	

பொறி முடிவு செய்தல்

பொறி	6000	ஏற்பாடு	2393.75
லாபம்	1393.75	காசு	5000
	7393.75		7393.75
		(4)	

உபகரண கணக்கு

மீதி	5000	மீ/செ	7000
கொ/வு	2000	(2)	
	7000		7000
மீ/வ	7000		

உபகரண பெறுமானத் தேய்வு

பெ/தே	600	வ/நட்	600
		(1)	

உபகரண பெறுமானத் தேய்வு ஏற்பாடு

மீ/செ	1800	மீதி	1200
			600
	1800	(2)	1800
		மீ/வ	1800

(மொத்தம் 20 புள்ளிகள்)

04)

தொங்கல் கணக்கு

		மீ/வ	5650(1)
க/கொடுநர்	(1) 6000	வட்டி	250(1)
மின்சாரம்	(1) 900	மே/ப/வட்டி	1000(1)
	6900		6900

agaram.lk

Scanned with CamScanner

இலாப சீராக்கக்கூற்று

விபரம்		தொகை	தொகை
சீராக்குவதற்கு முன் லாபம்			25000
+ விற்பனை	(2)	5500	
மின்சாரம்		900	6400
			31400
− வட்டி	(2)	250	
மே/ப/வட்டி		1000	(1250)
சீராக்கப்பட்ட லாபம்		(1)	30150

திருத்திய காசேடு

மீதி	(1) 12700			
ப/லாபம்	5000	நி/ கட்டளை - கா-தி	6000	
மின்சாரம்		வ/கட்டணம்	500	(4)
		காசோ/புத்தகம்	200	
			11000	
	17700		17700	

வங்கி இணக்கக்கூற்று

விபரம்	தொகை	தொகை
வங்கிக் கூற்றின் படி மீதி		8000 (1)
+ வசூலிக்கப்படாத ch	(1) 22000	22000
		30000
− மாற்றப்படாத ch	(1)12000	
வங்கி விட்ட தவறு	(1)7000	(19000)
தி/காசேட்/படி/ மீதி		11000 (1)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05)

திருத்திய க/ப கட்டுப்பாட்டுக் க/கு

மீதி	(1) 65000		
உட்திரும்பல்	(1) 40000	கொடுத்த கழிவு	4500 (1)
மறுக்கப்பட்ட ch	(1) 4000	அ/வி/மு/கடன்	6000
காசு	(1) 20000		
		மீ/செ	98500 (1)
	109000		109000 (1)
மீ/வ	98500		

agaram.lk
Scanned with CamScanner

திருத்திய க/கொ கட்டுப்பாட்டுக் க/கு

காசு	(2) 20000	மீதி	75000 (1)
வெளித்திரும்பல்	(1) 7500	கொள்வனவு	10000 (1)
மீதி	(1) 57500		
	85000		85000
		மீ/செ	57500

கடன்பாட்டோர் இணக்கக்கூற்று

விபரம்	தொகை	தொகை
க/பட்/கட்டுப்பாட்டு மீதி		98500 (1)
+ அறவிட / மு /கடன்	6000 (1)	6000
		104500
– விடுபட்ட மீதி	22500 (1)	(22500)
பட்டியல் மீதி		82000 (1)

கட/கொடு/ இணக்கக்கூற்று

விபரம்	தொகை	தொகை
க/கொ/கட்டுப்பாட்டு மீதி		57500 (1)
+ கொள்வனவு திரும்பல	7500 (1)	7500
		65000
– விடுபட்ட மீதி (1)	15000	
கொள்வனவு	10000	25000
பட்டியல் மீதி		40000 (1)

(4)

(20 புள்ளிகள்)

agaram.lk

Scanned with CamScanner